LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 2005/2006 (வெளிவாரி)
(பெப்ரவரி/மார்ச் 2008)

## PS 302 அரசியற்கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. "கட்சியின்றி ஜனநாயகம் இல்லை" இக்கூற்றை மதிப்பீடு செய்க?

02. "எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு சவாலாக அமைவதுடன் யாப்பின் பாதுகாவலனாகவும் தொழிற்படுகின்றன". இக்கூற்றை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடையினை எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளக்குக.

03. (அ) இருகட்சி முறை என்றால் என்ன?
(ஆ) இரு கட்சி முறையின் நன்மை தீமைகளை ஆராய்க.

04. "பல கட்சி முறை நிலவும் நாடுகளில் உறுதியான அரசாங்கத்தை அமைப்பது கடினமாகும்". இக்கூற்றினை விமர்சிக்குக.

05. (அ) பிரித்தானியாவில் கட்சிகள் உருவான பின்னணியினை விளக்குக?
(ஆ) பழமைபேணும் கட்சியின் ஒழுங்கமைப்பினை தெளிவாக்குக.

06. அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் கட்சிகள் பெறும் முக்கிய பங்கினை விளக்குக?

07. "இந்தியாவில் தனிக்கட்சி ஆதிக்க முறை செயல் இழந்து விட்டது". இக்கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடைக்கு காரணங்கள் தருக.

08. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வகட்சி மாநாடு சிறந்ததொரு மார்க்கமாக அமையுமா? ஆராய்க.

09. அமுக்கக் குழுக்கள் தமது நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக கையாளும் வழிமுறைகளை ஆராய்க.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மலையக மக்கள் ஐக்கிய முன்னணி
(ஆ) முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவம்
(இ) பொதுசன அபிப்பிராயம்
(ஈ) மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)

**************